




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.1.2026) ஆங்கிலப் புத்தாண்டு தினத்தையொட்டி சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரது நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்திய பின்னர் அங்கிருந்த பொது மக்களுக்கு ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

## பூவிருந்தவல்லி அறிஞர் அண்ணா அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி

# நூற்றாண்டு நிறைவு விழா - பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த பலூன்!

### அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பறக்க விட்டார்!

திருவள்ளூர், ஜன.02

திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி அறிஞர் அண்ணா அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பூந்தமல்லி, மாங்காடு, சென்னீர்குப்பம், திருவேற்காடு, காட்டுப்பாக்கம், அய்யப்பன்தாங்கல் உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளைச் சார்ந்த ஆயிரக்கணக்கான மாணவர்கள் படித்து வருகின்றனர். இந்தப் பள்ளியில் படித்த முன்னாள் மாணவர்கள் பலர் அரசு மற்றும் தனியார் துறைகளில் உயர் பதவிகளிலும், தொழிலதிபர்களாகவும், அதிகாரிகளாகவும், அரசியல்வாதிகளாகவும் சிறந்து விளங்குகின்றனர்.

1924 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த அரசு பள்ளியின் நூற்றாண்டு நிறைவு விழா தற்போது கொண்டாடப்படுகிறது. இந்த நிலையில் இந்தப் பள்ளியின் நூற்றாண்டு நிறைவு விழா வருகிற ஜன.6ஆம் தேதி மிகச் சிறப்பாக கொண்டாடும் விதமாக முன்னாள் மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் இணைந்து முன்னெடுப்புகளில் ஈடுபட்டுள்ளனர். இதையொட்டி பல்வேறு போட்டிகள், விழா மலர் வெளியீடு, கண்காட்சி அரங்கம், மரபு, கலாச்சார, பண்பாட்டை வெளிப்படுத்தும் விதமான நிகழ்ச்சிகள், மாணவர்களுக்கு பல்வேறு போட்டிகள், என திருவிழா போல் நூற்றாண்டு விழாவை கொண்டாடுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நூற்றாண்டு விழா குறித்து பொதுமக்கள் அனைவரும் தெரிந்து கொள்ளும் விதமாக ராட்சத பலூன் பறக்க விடும் நிகழ்ச்சி நேற்று மாலை பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. இதில்பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினருமான பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் ஆ.கிருஷ்ணசாமி தலைமை தாங்கினார்.

நகரச் செயலாளர் ஜி. ஆர்.திருமலை, நகர மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர் ,தலைமை ஆசிரியர் கிறிஸ்டோபர்ஜெயகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு ராட்சத பலூனை பறக்க விட்டார்.

இந்த நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில சிறுபான்மையினர் அணி இணை செயலாளர் சி.ஜெரால்டு, நகரக் கழக நிர்வாகிகள் எச்.தாஜுதீன், துரைபாஸ்கர், அப்பர் ஸ்டாலின், டில்லிராணி மலர் மண்ணன், எஸ். அசோக்குமார், ஜெ.சுதாகர், ப.அன்பழகன், பி. சௌந்தரராஜன், அ.ராஷிக், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ஏ.ஜி.ரவி, டி.குமரேசன், விமல் ஆனந்த்,

பி.ஜெ.ஜெயசீலன், சு.அன்பழகன், வட்டச் செயலாளர்கள் யுவராஜ் பாபு, சுகுமார், பழனி, நந்தகுமார், பழனி, சரவணன், ராஜ்குமார், நெல்சன், உமா சங்கர், சத்யா, நித்தியானந்தம், கிரி, சேகரன், த. அம்மு பாலாஜி, ஆசிரியர்கள்ஆரோக்கியம்,அரசு,சகாயராஜ்,சாலமன்ராஜா,மற்றும் பெற்றோர் ஆசிரியர் சங்க நிர்வாகிகள், பள்ளி ஆசிரியர்கள், முன்னாள் மாணவர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.


